**<u>Date : 17.02.2026</u>**

**SC.No.75/2025**

**P.W. 2 திரு. செல்வராஜ்**

எதிரிகள் ஆஜர்

(சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டார்)

**<u>குறுக்கு விசாரணை</u>**

1. எனது மகனுக்கு எதிராக குற்ற வழக்குகள் பல வழக்குகள் உள்ளது என்றால் சரியல்ல, கொலை வழக்கு மட்டுமே உள்ளது. எனது மகன் மது குடித்ததால் வீட்டுக்கு வரக்கூடாது என நான் சொல்லிவிட்டேன் என்றால் சரிதான். சம்பவத்திற்கு 4–5 நாட்களுக்கு முன்பு எனது மகன் வீட்டிற்கு வரக்கூடாது என நான் சொல்லிவிட்டேன். நான் சொன்ன நாள் முதல் எனது மகன் வீட்டிற்கு வராமல் இருந்தார் என்றால் சரியல்ல, அவ்வப்போது வருவார்.

2. சம்பவம் நடந்ததாக சொல்லக்கூடிய தினத்தன்று நான் எனது மகனை எங்கும் பார்க்கவில்லை என்றால் சரிதான், நான் வீட்டுக்குள்ளேயே இருந்தேன். எனது மனைவி தகவல் சொன்னவுடன் நேரடியாக காவல் நிலையத்திற்கு தான் புகார் கொடுக்கச் சென்றோம் என்றால் சரிதான். எனது மனைவி சொல்ல, சொல்ல நான் புகார் எழுதினேன். நான் அந்த புகாரில் கையெழுத்து போட்டேன். எனது மனைவி சொல்ல சொல்ல புகார் நான் எழுதி கையெழுத்து போட்டதாக சொல்வது உண்மைக்கு புறம்பானது என்றால் சரியல்ல. எனது மனைவி காவல் நிலையத்தில் புகார் சொல்லி அதை போலீசார் எழுதி அதில் தான் கையெழுத்து பெறப்பட்டது என்றால் சரியல்ல.

3. புகாரை காட்டி சாட்சியிடம் கேட்ட போது முதலில் சாட்சி புகார் தன்னால் எழுதப்படவில்லை என்று தெரிவித்தார். அதன் பிறகு மீண்டும் அந்த புகாரை பார்த்துவிட்டு தான்தான் அந்த புகார் எழுதியதாகவும் சாட்சி கையெழுத்து போட்டதாகவும் தெரிவிக்கிறார். இந்த புகாரானது என்னால் எழுதப்பட்ட புகார் இல்லை என்றால் சரியல்ல. இந்த புகாரானது எழுதாத வெள்ளை தாளில் காவல் துறையினர் என்னிடமும், எனது மனைவியிடமும் கையெழுத்து பெற்றுக்

கொண்டு வழக்கை பொய்யாக ஜோடிக்க வேண்டும் என்ற நோக்கத்தில் போலிசாரால் தன்னிச்சையாக எழுதிக் கொண்ட புகார் என்றால் சரியல்ல. எனது மனைவி இந்த வழக்கு சம்பந்தமான எந்த நிகழ்வையும் என்னிடம் தெரிவித்ததில்லை என்றால் சரியல்ல. எனது மனைவியுடன் நான் காவல் நிலையத்திற்கு சென்று இந்த வழக்கு சம்பந்தமான எந்த புகாரையும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல.எதிரிகள் மீதிருந்த முன்விரோதத்தின் அடிப்படையில் உண்மைக்கு புறம்பாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை – இல்லை</u>**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

SWARNAM J NATARAJAN

Digitally signed by SWARNAM J NATARAJAN
Date: 2026.02.17 16:15:35 +0530

முதன்மை மாவட்ட அமர்வு நீதிபதி,
தேனி.